ரால்ப் வால்டோரா எமேர்சனும் வேதாத்திரி மகரிஷியும்

அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்

இதனுள்ளே

1. **ரால்ப் வால்டோரா எமேர்சனும் வேதாத்திரி மகரிஷியும்** – ஒரு ஒப்பாய்வு
2. **ரால்ப் வால்டோரா எமேர்சன் வாழ்க்கை வரலாறு.**
3. 4 கட்டுரைகளும் பேருரைகளும்
4. எமேர்சனின் மெய்யியல்
5. **எமேர்சனின் தெரிவுசெய்யப்பட்ட படைப்புகள்**
6. வேதாத்திரி மகரிஷி வாழ்க்கை குறிப்பு
7. **எமேர்சனும் வேதாத்திரியும் தத்துவங்கள் ஒப்பீடு**

8. ஒத்தும் உதவியும் வாழ்தல்!
9. வெற்றி கொள்ள இரண்டு பண்புகள்
10. மனவலிமையா? மனோதிடமா?
11. ஞானப்பதையில் பயணிப்போம் வாருங்கள்
12. பிரபஞ்ச சக்தியை பெறுவோம்
13. ஆசிரியரும் கல்வியும்
14. மனிதன் எப்படி வாழவேண்டும்?
15. நட்பு எப்படி இருக்க வேண்டும்?
16. .விதியும் வினையும்
17. சொர்க்கம் – ஒழுக்கம் - மனப்பக்குவம்
18. அறிஞன் – அறிஞர்கள்
19. இன்பமும் துன்பமும் இயற்கையே!
20. **தோல்வியே வெற்றியின் ஏணிப்படிகள்**
21. அச்சம் என்பது மடமையடா!
22. **அச்சத்தைப் போக்குவது அறிவு!**
23. **உழைப்பே உயர்வு**
24. உச்சக்கட்டப் பிரசவிப்பு

பிரபஞ்ச சரித்திரத்திலேயே அதன்தொடக்கம் முதற்கொண்டு இன்று வரையில் தனது அறிவின் தெளிவால் உணர்ந்து கொண்ட ஒரு உயர்ந்த ஜீவ இனம்தான் மனிதன்.

இதே போன்ற பண்பட்ட சிந்தனைகளைக் கொண்டது பண்பாடு. பண்பாடு என்பது காலங்கள் தோறும் மாறக் கூடிய ஒன்றாகும்.

மனித இனத்தில் சிந்தனைகள் எவ்வளவுதான் மாறினாலும் அவற்றில் பண்பாடு என்பது கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

ஆதிகாலம் முதல் இன்று வரை பண்பாடு என்பது நாகரீகத்திற்கு ஏற்றற்போல மாறிக் கொண்ட இருக்கிறது.

மனித இனப் பண்பாடு சிந்தனைகள் பற்றிய கருத்துகளை வழங்கியவர்களில் எமேர்சன் மற்றும் வேதாத்திரி மகரிஷியின் பங்களிப்பு முக்கியமானதாகும்.

இங்கு வெவ்வேறு நாட்டைச் சேர்ந்த இரண்டு பெரும் தத்துவஞானிகளை ஒப்பாய்வு செய்வதால் நமது அருள்தந்தை வேதாத்திரி மகரிஷியின் வேதாத்திரியப் பண்புகளை, சிறப்புகளை, பெருமைகளை சிறப்பாகவும், நிறைவாகவும் புரிந்து கொள்ள முடிகிறது.

மேலும் உலகம் முழவதும் வேதாத்திரியத்தின் பெருமையை கொண்டு செல்ல இயலும்.

1.ரால்ப் வால்டோரா எமேர்சனும் வேதாத்திரி மகரிஷியும் – ஒரு ஒப்பாய்வு

- உலகம் தந்த தலைசிறந்த சிந்தனைவாதிகளில், ரால்ப் வால்டோரா எமேர்சனும் வேதாத்திரி மகரிஷியும் குறிப்பிடத்தக்கவர்கள்.
- ரால்ப் வால்டோரா எமேர்சன் பத்தொன்பதாம் நூற்றாண்டின் அருந்தவப் புதல்வர். வேதாத்திரி மகரிஷி இருபதாம் நூற்றாண்டின் அருந்தவப் புதல்வர்.
- அமெரிக்க நாடு செய்த தவப்பயனாக வட அமெரிக்காவின் பாஸ்டனில் எமேர்சன் அவதரித்தார். உலகமும் மனிதனும் ஏன் எனச் சிந்தித்தவர் எமர்சன்.
- பாரத நாடு செய்த தவப்பயனாக இந்தியாவின் தமிழகத்தில் கூடுவாஞ்சேரியல் வேதாத்திரி மகரிஷி அவதரித்தார்.
- உலக அமைதியைப் பற்றியும்,தனி மனித அமைதி பற்றியும் சிந்தித்து மானுடத்திற்கு "மனவளக்கலை பயிற்சி"யைப் பாடமாகவும், பட்டமாகவும் தந்தவர் வேதாத்திரி மகரிஷி. அறிவுக்கு கோயில் எழுப்பிய முதல் ஆன்மீக வாதி
- ரால்ப் வால்டோரா எமேர்சன் ஐக்கிய அமெரிக்க நாடுகளைச் சார்ந்த எழுத்தாளராகவும், சொற்பொழிவாளராகவும்,

கவிஞராகவும் விளங்கிவர். 19ஆம் நூற்றாண்டின் மையப்பகுதியில் "கடப்புவாதம்" (Transcendentalism) என்னும் கொள்கையை முன்னெடுத்துச் சென்ற அறிஞர் ஆவார்.

- வேதாத்திரி மகரிஷி – இந்தியாவின் ஆன்மீக எழுச்சியை உண்டு பண்ணிய எழுத்தாளராகவும், கவிஞராகவும், சொற்பொழிவாளராகவும் விளங்கி, இருபதாம் நூற்றாண்டில் "வாழ்க வையகம் வாழ்க வளமுடன்" என்று உலகளாவிய மந்திரத்தை முன்னெடுத்துச் சென்ற அறிஞர் ஆவார்.
- ஐக்கிய அமெரிக்காவின் பாஸ்டன் நகரில் 1803 ஆம் ஆண்டு மே 25 ஆம் நாள்– ரால்ப் வால்டோரா எமேர்சன் பிறந்தார். தந்தையின் பெயர் வில்லியம் எமேர்சன். தாயார் பெயர் ரூத் உறஸ்கின்ஸ்.
- வேதாத்திரி மகரிசி 1911 ஆம் அண்டுஆகஸ்டு திங்கள் 14 ஆம் நாள் இந்தியாவின் தமிழகத்தில் கூடுவாஞ்சேரி கிராமத்தில் பிறந்தார். தந்தையின் பெயர் வரதப்ப முதலியார். தாயார் பெயர் முருகம்மாள் (சின்னம்மா)
- வால்டோரா எமேர்சன் கி.பி. 1803 முதல் 188 வரை 79 ஆண்டுகள் வரை வாழ்ந்தார். வேதாத்திரி மகரிஷி 1911 ஆம் ஆண்டு முதல் 2006 ஆண்டு வரை 95 ஆண்டுகள் வரை வாழ்ந்தார்.
- எமேர்சன் கல்லூரி வரை படித்தவர். வேதாத்திரி மகரிஷி – மூன்றாம் வகுப்பு வரைதான் படித்தார்.
- இரண்டு பெரும் சிந்னையாளர்களும் இளமையில் வறுமையில் வாடியவர்கள்தாம்.
- எமேர்சன் முதலில் ஆசிரியர் வேலையும் பின்பு மதகுரு வேலையையும் செய்தார்.
- வேதாத்திரி மகரிஷி குடும்பத் தொழிலான நெசவுத் தொழில் செய்து வந்தார். ஏழை நெசவாளியாக உழைத்து படிப்படியாக நெசவுத் துறையில் உயர் நிலைக்கு வந்தார்.
- எமேர்சனும் அவரது நண்பர்களும் இணைந்து 1859ல் ஆழ்நிலை மன்றம் [Transcendental Club] என்ற அமைப்பை உருவாக்கினார்கள்.
- வேதாத்திரி மகரிஷி உலக சமுதாய சேவா சங்கத்தை உலக அமைதிக்காக தொடங்கினார்.

- வேதாத்திரி மகரிஷி மனவளக்கலை வாயிலாக ஒரு மாபெரும் புரட்சியை சமுதாயத்தில் உண்டாக்கினார்.
- தனி மனித அமைதி - பின் உலக அமைதி ஏற்பட திட்டம் வகுத்தவர் வேதாத்திரி மகரிஷி.
- தி டயல் என்ற டார்வின் இதழை எமேர்சனும் அவரது நண்பர்களும் வெளியிட்டிருக்கிறார்கள்.
- அன்பொளி என்ற ஆன்மீக மாத இதழை வெளியிட்டவர் வேதாத்திரி மகரிஷி. இந்த மாத இதழ் இன்றும் தமிழ் ஆங்கிலத்தில் வெளிவந்து கொண்டிருக்கிறது.

2.ரால்ப் வால்டோரா எமேர்சன் வாழ்க்கை வரலாறு. **(கி.பி.1803-1882)**

ஐக்கிய அமெரிக்காவின் பாஸ்டன் நகரில் 1803 ஆம் ஆண்டு மே 25 ஆம் நாள் ரால்ப் வால்டோரா எமேர்சன் பிறந்தார்.

"ரால்ப்" என்பது தாயார் இட்ட முதல் பெயராகும். அது அவள் சகோதரன் ரால்ப் உறஸ்கின்ஸ் நினைவாக வைத்த பெயராகும்.

அடுத்து தந்தை குடும்பத்தில் வழங்கி வரும் நினைவாக "வால்டோ" என்ற பெயரைச் சூட்டினார்.

வில்லியம் எமேர்சன் தம்பதிகளுக்கு பிறந்த எட்டுக் குழந்தைகளில் எமேர்சன் இரண்டாவது குழந்தையாவார்.

எமேர்சனுக்கு ஒன்பது வயதிருக்கும் போது அவரது தந்தையார் வயிற்றுப் புற்று நோயால் இறந்தார். அப்பொழுது அவருக்கு வயது 42 தான்.



எமேர்சனை ஒன்பதாவது வயதில் பாஸ்டனில் உள்ள பொது இலத்தீன் பள்ளிக்கு அனுப்பினார்கள்.

எமேர்சனுக்கு போட்டுக் கொள்ள ஒரு சட்டைக்குக் கூட வழியில்லை.

ஒரே சட்டையை அவனும் அவன் சகோதரனும் மாற்றி மாற்றி போட்டுக் கொண்டு பள்ளிக்குச் செல்வார்கள்.

அதைக் கண்டு மற்ற மாணவர்கள் அவர்களைப் கேலி செய்வார்கள். ஞானம் உள்ள இடத்தில் வறுமை என்பது இயற்கை தானே?

பின்னர் உறார்வோர்டு பல்கலைக் கழகத்திலும் கல்வி பயின்று பட்டம் பெற்றான்.

கல்வி தொடர்பான செலவுகளுக்கு நண்பர்களிடமிருந்தும் தேவாலயங்களிலிருந்தும் நிதியுதவி பெற்றான்.

“எண்ணோடு எழுத்தின் வனப்பே வனப்பு” என்பதை உணர்ந்த எமேர்சன் இளமையின் கஷ்டங்களைப் பொருட்படுத்தாமலும் வருந்திக் கல்வி கற்றான்.

கல்லூரி படிப்பு முடிந்து வெளி வந்த பின்னர், ஒரு பள்ளிக்கூடத்தில் மாணவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கும் ஆசிரிய வேலைப் பார்த்தான்.

தனது 25 வயதில் எல்லன் லூயிஸா தக்கர் என்ற பெண்ணை காதல் மணம் புரிந்து கொண்டார். தன் காதலியின் பொருட்டு பல காதற் கவிதைகளை எழுதியுள்ளான்.

இல்லற வாழ்வைத் தொடங்கிய அதே ஆண்டில் மாந்தேன், ரூஸோ, கூப்பர், ஸ்காட், காம்பி ஆகியோர்களின் நூல்களை வாங்கிப் படித்தான்.



உறார்வார்ட் கல்லூரி நூல் நிலையத்திலிருந்து பிளேட்டோ, மார்க்கஸ் அவரேலியர், கொர்டர் ஆகியோரின் தத்துவ நூல்களை இரவல் வாங்கி படித்தான்.

செனோபன், அரிஸ்டாடில், புளுடார்க், லூக்ரெட்டியஸ், பிளேட்செர், மாசிங்கர், ஸ்விப்ட், ரிச்சர்ட்சன், லாம்ப், சில்லர், கெதே முதலியவர்கள் புத்தகங்களையும் படித்து தேர்ந்தான்.

எமேர்சன் கல்லூரி மாணவனாயிருந்த போதே- ஜெர்மன் அறிஞர்களின் புத்தகங்களையும், கிரேக்க புராணங்களையும், ஆங்கில இலக்கியத்தையும் படித்து - அந்த ஆசிரியர்களின் கருத்துகளைப் பற்றிச் சிந்திப்பான்.

கோலோரிட்ஜின் "நண்பனும்" காம்பியின் "மனித அமைப்பு விதிகளும்" அவனுக்கு மிகவும் பிடித்திருந்தன.

பின்பு ஆசிரியர் வேலையை விட்டு விட்டு மதகுரு வேலையை ஒப்புக் கொண்டான். இந்த காலத்தில் அவனுக்கு பல அறிஞர்கள் தொடர்பு ஏற்பட்டது.

அவனது புதிய கருத்துக்கள், "மனிதனே கடவுள்" என்ற புதிய தத்துவம் கேட்போரின் உள்ளத்தைக் கவரத் தொடங்கின்.

மனிதனுக்கும், இயற்கைக்கும் என்ன தொடர்பு? இயற்கையிடமிருந்து இந்த ஓர் பெரும் இரகசியத்தை ஆராய்ந்தார்.

வள்ளுவரும் மெய்ப்பொருள் பற்றிச் சிந்தித்தவர்களை "கற்றீண்டு மெய்ப் பொருள் கண்டார் தலைப்படுவர்" என்று போற்றி, உலகின் தலைவர்களாக அவர்களை போற்றினார்.

சிந்தனையாளர் எமேர்சன் வள்ளுவரின் இந்த இலக்கணத்திற்கு முற்றிலும் தகுதியடையவராக இருப்பதால் தான் உலகம் அவருக்குப் புகழ்மாலை சூடி அவரைச் சிரமேல் வைத்துப் போற்றுகிறது.

எமேர்சன் கசடற கற்ற கல்விமான். ஆயதுறைகள் அனைத்தைப் பற்றியும் ஆராய்ந்தவர்.

அகப்பொருள் உண்மையறிந்து உலகிற்கு எடுத்தோதியவர். இயற்கை நமக்களித்த பெரும் பிரதிநிதி, சிந்தனையாளர்களுக் கெல்லாம் தலை சிறந்த சிந்தனையாளர்.

உலகெங்கும் சுற்றி தனது சொற்பொழிவுகளை மக்களிடம் விதைத்தார்..மதப் சொற்பொழிவும் செய்தார்.

அவரது புகழ்பெற்ற சொற்பொழிவுகள்...

- ."இயற்கையின் பிரயோஜனங்கள்",
- தண்ணீர்",
- "மனிதப் பண்பாடு",
- "மனிதவாழ்க்கை",
- "தற்காலயுகம்",

போன்றவையாகும்.

எமோர்சனும் அவரது நண்பர்களும் இணைந்து 1859ல் "ஆழ்நிலை மன்றம்" என்ற அமைப்பை உருவாக்கினார்கள்.

தி டயல் என்ற இதழை அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள்.
எமோர்சனில் கீதையும் வேதங்களும் பெரும் பாதிப்பைச் செலுத்தின.

குறிப்பாக வேதங்கள் இயற்கையை இறை வடிவமாகக் காணும் ஆழ்நிலையே அவரை ஆழ்நிலைவாதத்தின் அடிப்படைக் கருதுகோள்களை உருவாக்கச் செய்தது என்று சொல்லலாம்.

எமோர்சன் விதைத்த வித்துக்குள் செடியாகி, மரமாகி தளிர்விட்டுப் பூத்துக் குலுங்கத் தொடங்கியது.

அவர் புகழ் ஐரோப்பாக் கண்டமெங்கும் பரவியது. பிரிட்டன் நாடு அவர் சிந்தனைகளை புகழ்ந்தது.

- தோரோ, விட்மன், ஒலிவர் வென்டல் ஹோம்ஸ், மாத்யூ அரினால்ட், லிங்கன், எமிலி டிக்கின்சன், எல்பர்ட் ஹபர்ட்,

உட்ரோ வில்சன் போன்ற பிரபலமானவர்கள் எமேர்சனின் உயர் இலட்சியம், நேர்மை, தைரியம், சுய சார்பினை வலியுறுத்தியது போன்றவற்றால் பாதிக்கப்பட்டார்கள்.

வில்லியம் ஆலன் ஒயிட் தன் பதினேழு வயதில் எமேர்சனின் சுயசார்பு கட்டுரையைப் படித்தார்.

"சுய சார்பு என்ற குணத்தை எமேர்சன் என்றென்றும் உன்னதமானதாக ஆக்கிவிட்டார்" என்ற ரிச்சர்ட் சி, கேபட் அறிவித்தார்.

"ஒருஇளைஞன் படிக்க வேண்டிய முக்கியமான கட்டுரைகளில் ஒன்று" என்று ஆல்பர்ட் ஜே பிவரிட்ஜ் கூறுகிறார்.

எமேர்சன் தான் வாழ்ந்த காலத்தில் தன் சமகால மக்களின் தேவைகள், பிரச்சினைகள், எதிர்பார்ப்புகள் பற்றிப் பேசினார்.

ஆனால் இக்காலத்திலும் அவர் கருத்துக்கள் பொருத்தமாகவே இருக்கின்றன.

ஏனெனில் அவர் வார்த்தைகளில் இருக்கும் சாகாவரம் பெற்ற தன்மை அதை உயிரோடு துடிப்போடு இருக்கச் செய்கின்றன.

1880 ம் ஆண்டின் இறுதியில் அவர் உடல் நலம் குன்றத் தலைப்பட்டது.

சிறிது நேரம் தொடர்ந்தாற் போல் பேசுவதற்குக் கூடச் சக்தியற்றவரானார். 27-4-1982 ஆம் ஆண்டு இயற்கையிடம் இரண்டறக் கலந்தார்.

அமெரிக்க சிந்தனை என்பது இரு பெரும் சிந்தனைப் பள்ளிகள்தான்.

- ஒன்று எமேர்சன் தோரோ ஆகியோரில் உருவாகி வளர்ந்த ஆழ்நிலைவாதம். [Transcendentalism]
- இன்னொன்று செயல்முறைவாதம் [Pragmaticism] என்று பொதுவாகச் சொல்லப்படும் சிந்தனை மரபு.

இரண்டும் அடிப்படையில் ஒன்றுக்கு ஒன்று எதிரானவை. ஆழ்நிலைவாதம்.

அமெரிக்க கருத்துமுதல்வாதம் என்றும் செயல்முறைவாதம் அமெரிக்க பொருள்முதல்வாதம் என்றும் சொல்லலாம்.

அவை இரண்டும் ஒன்றுடன் ஒன்று உரையாடி வளர்ந்தவை. எமேர்சன் ஒரு பெரும் பேச்சாளர். அவரது தந்தை ஒரு பாதிரியார். எமேர்சனும் மத சிந்தனைகளில் இருந்தே ஆரம்பிக்கிறார். மெல்ல மெல்ல அவர் சுதந்திர ஆன்மீகம் என்னும் கருத்துநிலை நோக்கி நகர்ந்தார்.

கட்டுரைகளாக வந்த அவரது உரைகளில் மூன்று உரைகள் வழியாக அவரை நன்றாக புரிந்துகொள்ளலாம்.

- தற்சார்பு [Self-Reliance]
- இயற்கை [Nature]
- அமெரிக்க அறிஞன் [American Scholar]

ஒட்டுமொத்தமாக எமேர்சனின் சிந்தனைப் பங்களிப்பு என்ன? கிறித்தவ மரபு முன்வைத்த கூட்டான ஆன்மீகம் என்ற நிலைக்கு எதிராக தனிமனித ஆன்மீகம் என்பதை அவர் முன்வைத்தார்.

ஒரு தனிமனிதன் தன் ஆன்மீக விடுதலையையும் வாழ்க்கை நிறைவையும் நோக்கி முடிவிலாது முன்னேறுவதற்கான உரிமை அளிக்கும் ஒரு சமூகத்துக்காக அவர் வாதிட்டார்.

அதன் மூலம் தனிமனித உரிமையை அடிப்படையாகக் கொண்ட அமெரிக்க இலட்சியவாதம் உருவாவதற்கு பெரும் பங்களிப்பாற்றினார்.

அவர் தனிமனிதவாத ஆதரவாளராகவும், சமூகத்தில் நெருக்கடி கொணர்கின்ற காரணிகளை விமர்சிக்கும் முன்னறிவு கொண்டவராகவும் போற்றப்படுகிறார்.

அவர் தம் சிந்தனைகளை எண்ணிறந்த கட்டுரைகள் வழியாகவும், ஐக்கிய அமெரிக்கா நாடெங்கும் வழங்கிய சொற்பொழிவுகள் வழியாகவும் வெளியிட்டுள்ளார்.

வேதாத்திரி மகரிஷியும் தனிமனிதவாத ஆதரவாளராகவும், சமூகத்தில் நெருக்கடி கொணர்கின்ற காரணிகளை விமர்சிக்கும் முன்னறிவு கொண்டவராகவும் போற்றப்படுகிறார்.

தனி மனிதன் அமைதி பெறவும், இறையுணர்வைப் பெற்றிடவும், இறைநீதியை உணரவும் வழி காட்டிய வள்ளல் வேதாத்திரி மகரிஷி.

3.எமேர்சன் கட்டுரைகளும் பேருரைகளும்

எமேர்சன் சம கால சமய நம்பிக்கைகள், சமூகக் கருத்துகள் ஆகியவற்றிலிருந்து படிப்படியாக விலகிச் சென்றார்.

1836இல் "இயற்கை" என்ற தலைப்பில் அவர் ஒரு கட்டுரை வெளியிட்டார்.

அதில் அவர் "கடப்புவாதம்" என்ற தமது மெய்யியல் கொள்கையை முன்வைத்தார்.

புகழ்மிக்க அந்தக் கட்டுரை வெளியீட்டுக்குப் பின் எமேர்சன் 1837இல் "அமெரிக்க அறிஞர்" (The American Scholar) என்ற தலைப்பில் ஒரு பேருரை ஆற்றினார்.



அவ்வுரை பற்றி விமர்சித்த ஆலிவர் வெண்டெல் ஹோம்சு என்பவர், அதை "அறிவுசார்ந்த விடுதலை முழக்கம்" என்று விவரித்துள்ளார்.

எமேர்சன் வெளியிட்ட முக்கிய கட்டுரைகள் முதலில் பேருரைகளாக வழங்கப்பட்டவை. பின்னர் எமேர்சன் அவற்றை மறுபார்வை செய்து அச்சுக்கு அனுப்பினார்.

அவர் வெளியிட்ட கட்டுரைத் தொகுப்பின் முதல் பகுதியும் இரண்டாம் பகுதியும் அவருடைய சிந்தனைகளின் மையக் கருத்துகளை உள்ளடக்கி இருக்கின்றன.

அவை முறையே 1841, 1844 ஆண்டுகளில் வெளியாயின. அக்கட்டுரைத் தொகுப்புகளில் அவர் எழுதிய

- "தற்சார்பு" (Self-Reliance),
- "மேல்-ஆன்மா" (The Over-Soul),
- "வட்டங்கள்" (Circles), "
- கவிஞன்" (The Poet),
- "அனுபவம்" (Experience)

போன்ற கட்டுரைகள் அடங்கியுள்ளன.

4.எமேர்சனின் மெய்யியல்

"இயற்கை" என்னும் கட்டுரையும் மேலே குறிப்பிட்ட கட்டுரைகளும் 1830களின் நடுப்பகுதியில் இருந்து 1840களின் நடுப்பகுதிவரையான கால கட்டத்தில் வெளியானதோடு, எமேர்சனின் எழுத்துவளம் மிக்க காலத்தைச் சார்ந்தவையாகவும் உள்ளன.

எமேர்சன் இறுகிய மெய்யியல் கொள்கைகளை ஏற்காதவர்.
பல பொருள்கள் பற்றிய சிந்தனைகளை அவர் வழங்கியுள்ளார்.



அவர் விளக்கும் சில மெய்யியல் கருத்துகளுள்

- "தனித்துவம்",
- "சுதந்திரம்",
- "மனிதர் நினைத்தால் எதையும் சாதிக்கலாம்",
- "ஆன்மாவும் சூழல் உலகும் உறவு கொண்டவை",
- "பிரபஞ்சம் என்பது இயற்கை மற்றும் ஆன்மாவின் தொகுப்பு"

போன்றவை அடங்கும்.

எமேர்சனின் மெய்யியல் சிந்தனைகளை விளங்கிக்கொள்வது கடினம் என்று சம காலத்தவர் கருதினார்கள். அவரது எழுத்துப் பாணியைப் புரிவது இன்றும் கடினம்தான்.

என்றாலும், அமெரிக்க சிந்தனையாளர்களுள் தலைசிறந்த ஒருவராக எமேர்சன் விளங்குகிறார்.

அவருக்குப் பின் வந்த பல எழுத்தாளர்களும் கவிஞர்களும் அவரிடமிருந்து பலவற்றைக் கற்றுள்ளார்கள்.

எமேர்சனிடம், அவருடைய சிந்தனையின் மையம் என்ன என்று கேட்டபோது அவர், "தனிமனிதன் எல்லையற்ற தன்மையினன் என்பதே எனது மையக் கொள்கை" என்றுரைத்தார்.

5.எமேர்சனின் தெரிவு செய்யப்பட்ட படைப்புகள்

- *Essays: First Series* (1841)
- *Essays: Second Series* (1844)
- *Poems* (1847)
- *Nature; Addresses and Lectures* (1849)
- *Representative Men* (1850)
- *English Traits* (1856)
- *The Conduct of Life* (1860)
- *May Day and Other Poems* (1867)
- *Society and Solitude* (1870)
- *Letters and Social Aims* (1876)

Individual essays

- "Nature" (1836)
- "Self-Reliance" (*Essays: First Series*)
- "Compensation" (*First Series*)
- "The Over-Soul" (*First Series*)
- "Circles" (*First Series*)
- "The Poet" (*Essays: Second Series*)
- "Experience" (*Essays: Second Series*)
- "Politics" (*Second Series*)
- "The American Scholar"
- "New England Reformers"

Poems

- "Concord Hymn"
- "The Rhodora"

6.வேதாத்திரி மகரிஷி வாழ்க்கை குறிப்பு
(கி.பி.1911–2006)

அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி கூடுவாஞ்சேரி என்னும் கிராமத்தில் செங்குந்த கைக்கோளர் மரபில் நெசவுத் தொழில் செய்யும் வரதப்ப முதலியார், முருகம்மாள் (சின்னம்மாள்) தம்பதியர்களுக்கு எட்டாவது குழந்தையாகப் பிறந்தார்.

சிறுவயது முதலே வேதாத்திரி மகரிஷி அவரது தாயார் சின்னம்மாளிடம் நிறைய பக்திக் கதைகளையும், புராணக் கதைகளையும் அறிந்து கொண்டார்.

இவரது குடும்பச் சூழலில் இவருக்கு அதிகம் படிக்க வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது.

தன்னுடைய சொந்த ஊரில் மூன்றாவது வகுப்பு வரை படித்த இவர், பின்னர் தங்கள் குடும்பத் தொழிலான தறி நெய்தலைச் செய்யத் தொடங்கினார்.

18ஆவது வயதில் சென்னையில் தனியார் நிறுவனம் ஒன்றில் பணியாற்றும் வாய்ப்பு இவருக்கு ஏற்பட்டது.

சென்னையில் இவருக்கு ஆயுர்வேத மருத்துவர் எஸ். கிருஷ்ணாராவின் நட்பு கிடைக்க, அவர் மூலமாக தியானம், யோகா போன்றவைகளைக் கற்றார் மகரிஷி.

தனது வாழ்க்கையின் குறிக்கோளாகிய முழுமையை உணரும் நோக்கத்தால்உந்தப்பட்டு; சித்த, ஆயுர்வேத மற்றும் ஹோமியோபதி போன்ற மருத்துவ துறைகளைக் கற்றுத் தேர்ச்சி பெற்றார்.

இரண்டாவது உலகப் போரின் போது முதலுதவிப் பயிற்சியாளராகவும் பணிபுரிந்தார்.

பின்பு பொருளாதாரத் தன்னிறைவு பெற வேண்டும் என்று, தனது சுய முயற்சியினால் பல்லாயிரம் நபர்களுக்கு வேலை அளிக்கக்கூடிய அளவிற்கு ஒரு பெரிய நெசவுத் தொழிற்சாலையை உருவாக்கினார்.

அச்சமயத்தில் அரசாங்கத் தொழிற் கொள்கை மாற்றம் காரணமாக வியாபாரம் திடீர் சரிவு நிலையை அடைந்தது;

இருப்பினும் தன்னிடம் பணிபுரிந்த 2000 குடும்பங்களையும் காப்பாற்றுவதற்காக ஈட்டிய பொருள் அனைத்தையும் அவர்களுக்கே செலவழித்து அனைத்துப் பொருள் வளத்தையும் இழந்தார்.

அப்படியிருந்தும் மனதைத் தளரவிடாது மீண்டும் கடுமையாக உழைத்து படிப்படியாக பொருளாதாரத்தில் தன்னை மேம்படுத்திக் கொள்ள அரிசி வியாபாரம் போன்ற பல்வேறுபட்ட தொழில்களைச் செய்து தனக்கும், தன்னைச் சுற்றியுள்ளவர்களின் துன்பத்தைப் போக்கவும் பாடுபட்டார்.

தன் இரண்டு மனைவியருடைய மனதையும் நன்கு புரிந்தவராய் இருவரிடமும் பிணக்கின்றி அன்புடன் வாழ்ந்து காட்டினார்.

வறுமையிலேயே வாழ அடியெடுத்து வைத்த அவரது உள்ளத்தில்

- வறுமை என்றால் என்ன?
- கடவுள் என்பது எது?
- அதை ஏன் காண முடியவில்லை?
- மனித வாழ்க்கையிலேயே ஏன் துன்பங்கள் தோன்றுகின்றன

போன்ற கேள்விகள் அவ்வப்போது ஒலித்துக் கொண்டே இருந்தன.

இவற்றிற்கு காரணங்கள் கண்டு தெளிவு பெறுவதற்காக ஆராய்ச்சியிலும் தொடர்ந்து ஈடுபட்டு வந்தார்.

விளைவாக தனது 35வது வயதில் தன்னிலை விளக்கமாக இறைநிலையை உணர்ந்தார். அதன் அடிப்படையில் உலக மக்களுக்காக அவர் அளித்த வாழ்க்கை நெறியே மனவளக்கலை ஆகும்.

46 ஆம் அகவையில் உலக அமைதிக்காக 'உலக சமாதானம்' World peace என்ற 200 பாடல்கள் நூலை எழுதி 1957ல் வெளியிட்டார்.

இந்த இருமொழிகள் (தமிழ், ஆங்கிலம்) நூலை பாடத்திட்ட வழி பள்ளி, கல்லூரிகளில் பரப்ப வாழ்நாள் இறுதிவரை உழைத்து வெற்றி பெற்றார்.

இன்று 30 க்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்பு, மேல்பட்டப்படிப்பு, ஆராய்ச்சிப்படிப்பில் பலர் ஈடுபட்டு வருகின்றனர். ஆன்லைன் வகுப்புகளிலும் வேதாத்திரியம் கற்பிக்கப்பட்டு வருகிறது. (vethathiriam for World Peace - YouTube · SKY Yoga TV)

ஆன்மிகத் தேடல்

தனது சகோதரியின் மகளை (லோகாம்பாள்) மணந்து இல்லற வாழ்க்கையைத் தொடங்கினார்.

இல்லறத்திலும், நெசவுத் தொழிலிலும் ஈடுபாடு அதிகமிருந்த போதிலும் தனது ஆன்மீகத்தேடலில் மிகுந்த ஆர்வத்துடன் நாட்டம் கொண்டிருந்தார்.

சித்தர்களின் நூல்களைக் கற்று, தியானத்தில் வெகுவாக ஈடுபட்டு தன்னை அறிதல் என்ற அகத்தாய்வு முறையில் விடாமுயற்சியுடன் ஈடுபட்டார்.

இவரது ஆழ்ந்த ஆன்மீகத் தேடலின் விளைவாக தனது 35ஆவது வயதில் ஞானம் பெற்றார்.

அதிலிருந்து அடுத்த 15 ஆண்டுகளில் பல உன்னதமான ஆன்மீகக் கருத்துக்களைத் தனது எழுத்துக்களின் மூலமாகவும், உரைகளின் மூலமாகவும் மக்களுக்கு எடுத்துரைத்தார்.

பின்னர் தனது நெசவு தொழிலை முற்றிலும் விட்டு விட்டு தன்னை முழுமையாக ஆன்மீகத் துறையில் ஈடுபடுத்திக் கொண்டார்.

நூல்கள் இயற்றல்

இந்தப் பிரபஞ்சத்தைப் பற்றியும் மனித வாழ்க்கையைப் பற்றியும் தவநிலையில் தான் பெற்ற கருத்துக்களைப் பல கவிதைகளாகவும் கட்டுரைகளாகவும் புத்தக வடிவங்களில் இந்த உலகுக்கு வேதாத்ததிரி மகரிஷி அளித்துள்ளார்கள்.

இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் கலந்த தமிழ்ப்பாடல்களை இயற்றியிருக்கிறார்.

பாமர மக்களும் புரிந்து கொள்ளும் வகையில் எளிய தமிழில் தனது தத்துவங்களை எடுத்துரைத்தார். எல்லா மதங்களின் சாரம் ஒன்றே என்பதை மகரிஷி அவர்கள் வலியுறுத்துகிறார்.

தொடர்ந்து பல்வேறு நாடுகளுக்குச் செல்லும் வாய்ப்பு இவருக்குக் கிட்ட அங்கெல்லாம் ஆன்மீகச் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

மனிதகுலம் அமைதியாக வாழ ஏற்ற கருத்துகளையும் சாதனை முறைகளையும் உலகமெங்கும் பரப்பிட 1958–ஆம் ஆண்டில் வேதாத்திரி மகரிஷி அவர்கள் நிறுவிய உலக சமுதாய சேவா சங்கம். . . . . .

இன்று இந்தியாவிலும், சிங்கப்பூர், மலேசியா, ஜப்பான், தென்கொரியா, அமெரிக்கா போன்ற நாடுகளிலும் பல கிளைகளைக் கொண்டு இயங்கி வருகிறது.

வேதாத்திரி மகரிஷி ஏறக்குறைய தமிழிலும் ஆங்கிலத்திலும் சேர்த்து எண்பது நூல்களை எழுதியுள்ளார். சுமார் 2000 க்கும் மேற்பட்ட கவிதைகளை எழுதியுள்ளார்.

அருட்பெருஞ்சோதி நகர்

கொங்கு நாட்டில் பொள்ளாச்சி நகருக்கு அருகே வால்பாறை மலையோரத்தில் ஆழியாறு நீர்த்தேக்கம் அமைந்துள்ள இடத்தில்

அருட்பெருஞ்ஜோதி நகர் எனும் நகரம் வேதாத்திரி மகரிஷியால் 1984 கால கட்டத்தில் அமைக்கப்பட்டது.

அன்பொளி என்னும் ஆன்மீ இதழ் ஒன்றையும் வெளியிட்டார். இன்றும் தமிழ், ஆங்கிலம் மொழிகளில் வெளிவருகின்றன.

வேதாத்திரியம்

உலகில் மனித குலம் சிறப்பாக வாழ, உண்மை நிலை உணர்ந்து உயர்வான வாழ்க்கை நெறிமுறைகளைக் கண்டு அனுபவித்து, அதன் வழி வாழ்ந்து மற்றவரும் சிறப்பாக, அமைதியோடு வாழ வழிகாட்டியவர்கள் பலர்.

அவர்களில் அறிஞர்கள், தத்துவ மேதைகள், விஞ்ஞானிகள், மெய்ஞானிகள் அனைவரையும் நினைவு கூர்ந்து, வாழ்வியல் சிந்தனைகள், செயல் திட்டங்களை, மனித குலம் எளிமையாக புரிந்து கொண்டு, உணர்ந்து வாழ அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி எனும் வள்ளல் அருளிய அரிய கொடைதான் ."வேதாத்திரியம்".

வேதாத்திரியத்தில், அரசியல், ஆன்மீகம், அறிவியல், பொருளியல், கலை, இலக்கியம், கல்வி, மொழியியல், வேளாண்மை, இல்லறம், குழந்தையியல், உடலியல், பாலியல், இசை, ஒழுக்கவியல் போன்றவை பற்றிய தெளிவான தீர்க்க தரிசனமாகத் தீர்வுகள் பதிவு செய்யப்பட்டுள்ளது வியப்பிற்குரியதாகும்.

மறைவு[

வேதாத்திரி அவர்கள் தனது 95வது வயதில் மார்ச் 28, 2006 செவ்வாய்க்கிழமையன்று மறைந்தார்.

7.எமேர்சன்- வேதாத்திரி தத்துவங்கள் ஒப்பீடு

கிழக்கித்திய மேற்கத்திய இரண்டு மேதைகளின் புகழ்பெற்ற சில சிந்தனைகள் மானுடத்தை நோக்கியே பயணிக்கின்றன..

8.ஒத்தும் உதவியும் வாழ்தல்!

- "தனக்குத்தானே உதவிக் கொள்ளாமல் எவனாலும் அடுத்தவனுக்கு உதவ முடியாது என்பது உலகின் மிக அழகிய இயல்புகளில் ஒன்று" – எமேர்சன்

நீ மற்றவர்களுக்கு என்ன மாதிரியாக உதவ முடியுமோ அதற்கு மனதை விரித்து வைத்துக் கொண்டு தயாராக இருந்தால்– உனக்கு வேண்டியதெல்லாம் உனக்குக் கிடைத்துக் கொண்டே இருக்கும்" என்பார் வேதாத்திரி மகரிஷி..

முதலில் நாம் நமக்கு உதவி செய்ய வேண்டும்? எப்படி? வேதாத்திரியம் விடை தருகிறது.

இந்த உலக இன்பங்களை அனுபவித்து வரும் நமது உடம்பிற்கு உதவி செய்ய வேண்டும். எப்படி? நாள் தோறும் உடற்பயிற்சி செய்து நமது உடல் நலத்தை பாதுகாக்க வேண்டும். உடல் நலமே முதல் நலமல்லவா?

இதைத்தான் உடலோம்பல் இறைவழிபாடு என்பிறது வேதாத்திரியம் .எப்படி?

இவ்வளவு சாப்பிட்டால் போதும், நன்கு ஜீரணமாகும். உடல் நன்றாக இருக்கும் என்று தெரிந்து அளவோடும், முறையோடும் சாப்பிடுவோம். ஆனால், சுவையாக இருக்கிறது என்று அதிகமாகச் சாப்பிட்டால் அதை ஜீரணிப்பதற்கு வேண்டிய அதிகப்படியான அமிலம் எங்கிருந்து சுரக்கும்?

பற்றாக் குறையின் காரணமாக உணவு செரிக்காமல் தேங்கிப் போவதால் புளித்துப் போகிறது. அது வயிற்றில் புண்ணை உண்டாக்கித் துன்பம் தருகிறது. மனிதன் அறியாமையால் செய்யும் தவறுகள் தான் துன்பமாக விளைகிறது. இறையின் ஆற்றலால் எல்லாம் சரியாக நடக்கிறது.

ஆனால், நாம் ஆசையினால், மறதியினால், இறைவனின் செயலை மறந்ததினால் அதிகமாகச் சாப்பட்டோம்.

இறைவன் செயலில் குறுக்கிட்டோம். உறுப்புக் கெட்டுவிட்டது. அதன் விளைவாகத் துன்பத்தை அனுபவிக்கிறோம்.

இறையருள் எல்லாச் செயலிலும் கலந்து சரியான பலனைத் தந்து கொண்டே இருக்கிறது.

நாம் அதைத் தடுத்தால் அந்தத் தடைக்குத் தகுந்தவாறு துன்பம் வரும். இதைத் தெரிந்து கொண்டால் இறைவனுக்குப் பயந்து நடக்க வேண்டுமென்று முன்னோர்கள் சொன்னது தவறா?

தவறாகச் செய்தால் துன்பந்தான் வரும். சரியாகச் செய்தால் இன்பமே நிலைக்கும். இந்த உண்மையைத் தெரிந்து கொள்கிறபோது இறையுணர்வு வருகிறது.

அதற்கு ஏற்றவாறு இந்த உடலுக்கு உணவு, ஓய்வு, உடலுறவு, எண்ணம், உழைப்பு இந்த ஐந்தையும் அலட்சியம் செய்யாமல், அதிகமாக அனுபவிக்காமல், முரணாக அனுபவிக்காமல் நாம் பார்த்துக் கொள்வோம்.

உடல் நலமாக இருக்கும். மனமும் அமைதியாக இருக்கும். அப்படி அறிவின் தெளிவோடு உடலை நலமாக வைத்துக் கொள்வதும் இறை வழிபாடு தானே?

அடுத்து நமது உயிரை வளமாக வைத்துக் கொள்ள நாள்தோறும் காயகற்ப பயிற்சி செய்ய வேண்டும்..

மனசிக்கல்தான் உடல் நோய்களுக்கு 90 சதவீதம் காரணம். எனவே நமது மனதை ஆரோக்யமாக வைத்துக் கொள்ள நாள்தோறும் தவம் செய்ய வேண்டும்.

நமது பண்பு நலன்களை மேம்படுத்த ஒவ்வொரு நாளும் படுத்துறங்கும் முன்பும் அகத்தாய்வு பயிற்சி செய்ய வேண்டும்.

அகத்தாய்வு என்பது தூய்மையை நாடிச் செல்லும் தெய்வீகப் பயணம்.

தானே தனது செயல்களைச் சோதனை செய்து விளைவைக் கணித்து திருத்தம் பெறும் வெற்றியே அகத்தாய்வு.

எண்ணம்ஆராய்தல், ஆசை சீரமைத்தல், சினம் தவிர்த்தல், கவலை ஒழித்தல், நான் யார்? என்ற பயிற்சிகள் மூலம் அகத்தை ஆய்வு செய்து கொள்ள முடியும்.

நமது கடமை என்ன? முதலில் நாம், குடும்பம். ஊர், உலகம் என்று மற்றவர்களுக்கு உதவி செய்தல் வேண்டும். முதலில் கடமையில் வருவது நாம்தானே?

9.வெற்றி கொள்ள இரண்டு பண்புகள்

- "பொறுமையும் மனோதிடமும் எல்லாவற்றையும் வெற்றி கொள்ளும்" – எமேர்சன்

பொறுமை ஆன்மீக குணங்களில் மிகச் சிறந்தது.
உன்னால் பொறுமையாக இருக்க முடிந்தால் வேறு எதுவும் தேவையில்லை.

பொறுமை மட்டுமே போதுமானது, அது மட்டுமே போதும். வெறெதுவும் தேவையில்லை.

பொறுமை என்றால் இணைப்புணர்வு. எந்த வித அவசரமும் இல்லாமல், எந்த வித அறிபறியும் இன்றி இணைப்புணர்வோடு இருத்தல்.

நேசம் மிகவும் மெதுவாக வளரும், அதற்கு பொறுமை தேவை.

பொறுமை மிகவும் கவனமானது, பொறுமை சக்தியானது, பொறுமை விரிவடையக்கூடியது.

காத்திருத்தல் என்பது மிகவும் சிறப்பான குணம், அதற்கு ஆழ்ந்த பொறுமை தேவை. அது ஆழமான இணைப்புணர்வு.
உன் உள்ளிருப்பு குணப்பட தேவை ஒரு ஆழ்ந்த பொறுமை.
பயணகாலம் அளவிட முடியாதது. எனவே அளவற்ற பொறுமை தேவை.

பொறுமையான மனிதன் தியானிப்பவனாக மாறுவான், ஏனெனில் அவன் உள் வாங்குபவனாக மாறுகிறான்.

10.மனவலிமையா? மனோதிடமா?

- ஒன்றையே நினைந்து நினைந்து அதில் தானே தன்னை நிலை நிறுத்திக் கொண்டு பழகக்கூடிய உளப்பயிற்சியே மனோதிடத்தை (வில்பவர்) உண்டாக்கும்.” (வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள்)
- பொறுமையும் மனவலிமையும் அனைத்தையும் வெல்லும்- எமேர்சன்.

மனோ திடம் வேண்டும் – வேதாத்திரியம்

ஜென் துறவி பென்கேயிடம் படித்த சீடன் ஒருவன் தற்காப்புக் கலையில் மிகவும் ஆர்வம் உள்ளவன்.

இளைஞான சீடன் தன்னுடைய ஆசிரியருடைய மனோதிடத்தை சோதித்து பாாத்து விடுவது என முடிவெடுத்தான்.

ஒரு நாள் புத்த பிட்சுகள் வைத்து இருக்கும் ருத்திராட்சத்தை போன்ற மணிமாலையை உருட்டிக் கொண்டே தியானத்தில் அமர்ந்து இருந்த ஆசிரியரைப் பார்த்தான். ஈட்டியை எடுத்து வேகமாக ஆசிரியரை நோக்கி எரிந்தான்.

ஜென் ஆசிரியர் ஈட்டியின் குறியிலிருந்த இலாவகமாக விலகி தன் கையிலிருந்த மணி மாலையால் தட்டி விட்டார்.

அதன் பிறகு, சீடனைப் பார்த்து புன்னகையுடன் உனது ஈட்டி வீச்சு இன்னும் முதிர்ச்சி பெறவில்லை. ஈட்டி நகர்வதற்கு முன்பே உன்னுடைய மனம் நகர்ந்து விட்டது என்றார்.

மனோதிடம் – வேதாத்திரியம்

- ஒன்றையே நினைந்து நினைந்து அதில் தானே தன்னை நிலை நிறுத்திக் கொண்டு பழகக்கூடிய உளப்பயிற்சியே மனோதிடத்தை (வில்பவர்) உண்டாக்கும்." (வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள்)

11.ஞானப்பதையில் பயணிப்போம் வாருங்கள்

- "நடப்பவை எல்லாமே நம்பிக்கையைக் கற்றுக் தருகின்றன. நாம் கீழ்ப்படிய வேண்டியதுதான், ஒரே வேலை. நம் ஒவ்வொருவருக்கும் அவரே வழிகாட்டுவார். கூர்ந்து கவனிப்பதால் சரியான வார்த்தையை நாம் கேட்கலாம். வாழ்வாக உங்களுக்குள் ஓடும் சக்தி, ஞான ஓட்டத்தின் நடுவே இருந்திடுங்கள். அந்த ஓட்டத்தின் நடுவே நீங்கள் இருந்தால் முயற்சியே செய்யாமல் உண்மையை, சரியானதை முழு திருப்பதியை அடைவீர்கள்." – எமேர்சன்.

ஞானமும் வாழ்வும் – வேதாத்திரியம்

விதை, நிலம், எரு, தண்ணீர், காவல் இவைகள் அனைத்தும் சரியாக இருந்தால் தான் விளைவு நன்றாக இருக்கும்.

அதுபோலவே, ஒரு ஆசான் அத்துவிதத் தத்துவம் என்ற ஒருமைத் தத்துவ விதையை உன்அறிவு என்னும் நிலத்தில் ஊன்றினால் அது வளர்ச்சி பெற, நீ ஒழுக்கம் என்ற உரம் இடவேண்டும்.

அறிவை ஒன்றிப் பழகும் ஒருமைப் பழக்கமான தவமும் - ஆராய்ச்சியும் என்ற தண்ணீரும் பாய்ச்ச வேண்டும்.

அறிவை ஒன்றச் செய்து உறுதியான, அசைவற்ற நிலையடைவதே ஞானத்திற்குத் தேவையாக இருக்கிறது.

ஆகையால், அறிவு சலனப்பட்டுக் காமம், குரோதம், கோபம், மோகம், மதம், மாச்சரியம் என்னும் ஆறு குணங்களில் எதுவாயும் மாறாது பார்த்துக் கொள்ளும் விழிப்பு நிலையாகிய காவல் புரிய வேண்டும்.

இவைகள் எல்லாம் அமையும் வகைக்கும் அளவிற்கும் ஏற்றபடி "ஞானம்" என்ற விளைவும் உனக்கு உண்டாகும் என்பார்
-- யோகிராஜ் வேதாத்திரி மகரிஷி

நம்மையும் நம்மைச் சுற்றியுள்ள புறத்தையும் உள்ளதை உள்ளவாறு உணர்வதற்கான பக்குவத்தை பெறுவதற்கான பயிற்சிதான் ‘தவம்’ .

அறிய வேண்டியவைகளை முழுமையாக அறியப்பெற்று செய்யவேண்டிய செயல்களை நெறிபிறழாமல் செய்ய நம்மைத் தூண்டுவதே ‘தவம்’

ஞானம் பெருகி அஞ்ஞானத்தின் அவலம் குறைகிறது. கானகம் சென்றுதான் ‘தவம் செய்யவேண்டுமா? வேண்டாம்!

இல்லறத்திலிருந்தே ‘தவம் செய்யலாம் தவத்தில்தான் ‘அமைதி’ யான மனம் நமக்கு அமைகிறது. அந்த அமைதியால்தான் இல்லறத்தின் ஒவ்வொரு செயலிலும் இனிமையைக் காண்கின்ற பக்குவத்தை பெறமுடியும்.

ஞானிகள்தான் ‘தவம்’ இயற்றவேண்டுமா? இல்லையில்லை! குடும்பத்தினருக்கே தவமும், அகத்தாய்வும் (தற்சோதனை) மிகவும் அவசியம். மன அமைதிக்கு அகத்தவமும், வினைத்தூய்மைக்கு அகத்தாய்வும் தேவை.அகத்தவம் மன ஆற்றலை பெருக்கும் அகத்தாய்வு மன அழுக்கை நீக்கும்!

இவ்விரண்டையும் பெற அன்பர்களே வாரீர்! ‘தத்துவம், விஞ்ஞானம், வாழ்க்கை நெறி ’ இவை பற்றிய சிந்தனைத்தூண்டல் தான் மனவளக்கலை தவ மையங்கள், அறிவுத்திருக்கோயிலுக்கு.

ஞானமும் வாழ்வும்

இருளாக மௌனமாக இச்சையின்றி தேவையின்றி
இயக்கமின்றி இருப்பதுவே ஈசன் நிலை இதையுணர
இருள் நிலைக்கு மனமடங்கி ஈசனோடு ஒன்றாகி இணைந்த பின்னே
உணர்வது தான் மெய்ப்பொருள் உணர்வாம்.
இருள் நிலையை உணர்வதற்கும் பொருள்வடிவம் மனம் கொண்டால் எவ்வாறு பொருந்துமது எண்ணமின்றி மனம் ஒடுங்கி
இருளாகி பழகுவதற்கு ஏற்ற வழி உயிர் உணர்வே
இந்த மறை பொருள் உணர்த்த குரு அடி தொடர்வீர்....(ஞாக1135.)

எதிர்பார்த்தல் ஏமாற்றம் தவிர்த்து விட்டபோது
  இயற்கையிலே நமக்கமைந்த ஆற்றல் ஆக்கவழியில்
எதிர்ப்பின்றி தடையின்றி எழுச்சிபெற்று ஓங்கும்
  எச்செயலும் மன வலுவு நுட்பத்தோடு ஆகும்
எதிர்காலம் வாழ்க்கைத்துறை அனைத்திலும் புத்துணர்வும்
  இன்முகமும் தொண்டாற்ற பலர் நட்பும்கூடும்
எதிர்பார்த்து அறிவடைந்த ஏழ்மை நிலை தாண்டி
  எப்போதும் வளம் நிறைந்த மன நிறைவு உண்டாம்!
-- ஞானமும் வாழ்வும் கவி எண் 277

12..பிரபஞ்ச சக்தியை பெறுவோம்

- ”ஆயிரம் வருடங்களுக்கு ஒருமுறைதான் இரவில் நட்சத்திரங்கள் தோன்றினால் அவற்றை மக்கள் எப்படிப் போற்றிப் பாராட்டுவார்கள்! கண்ணில் தெரிந்த கடவுளின் நகரத்தை எத்தனை தலைமுறைக்கு நினைவு வைத்திருப்பார்கள்! ஆனால் ஒவ்வொரு இரவும் இந்த அழகின் தூதுவர்கள் தோன்றி தங்கள் எச்சரிக்கும் புன்னகையால் பிரபஞ்சத்திற்கு ஒளி தருகிறார்கள்.
- மரங்களில் நாம் அறிவையும் நம்பிக்கைகளையும் அடைகிறோம் வெற்று நிலத்தில் நின்றிருந்தால் என் தலையை சந்தோஷக் காற்று வருடி, எல்லையைற்ற் பிரபஞ்சத்திற்கு உயர்த்த, இழிவான அகந்தை மறைகிறது. பிரபஞ்ச அறிவின் சக்தி என்னுள் பாய்கிறது.” – எமேர்சன்.

காந்த சக்தியே கடவுள் சக்தி. அதுவே நம் உடலிலும் உயிராக விளங்குகிறது என்று வேதாத்திரியம் எளிமையாக மானுடத்திற்கு சொல்லியுள்ளது.

காந்தம், வான்காந்தம், ஜீவகாந்தம், பஞ்ச பூதங்கள் அவற்றின் தன்மாத்திரைகள் இவற்றைக் குறித்து வேதாத்திரி மகரிஷி அவர்களின் உறுதியான, தெளிவான, உண்மையான விளக்கங்களை தெரிந்து கொள்ளுங்கள். உணர்ந்து கொள்ளுங்கள்

இப்போது தவம் பற்றி சிந்திப்பபோம். பரம்பொருள் அல்லது ஆன்ம இரகசியங்களைப் பற்றிய தேடல் உள்ளவர்களுக்கு சுத்தவெளி, உயிர்சக்தி, வான் காந்தம் ஆகிய மூன்றைப் பற்றிய அறிவும், புரிதலும், மிகமிக அவசியமாகும்.

இந்த மூன்று சூக்கும சக்திகள் பற்றிய அறிவு விளக்கத்தை ஒருவர் பெற்று விட்டால் அவர் வாழ்க்கை வெற்றிகரமானதும், இணக்கம் மிகுந்ததும், அறிவு வளர்ச்சி மேலோங்கியதுமான ஒரு நிறைவான வாழ்க்கையாக அமையும் என்பதில் எந்த வித ஐயமுமில்லை.

நமக்கு முன்னால் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாக ஞானிகளும், யோகிகளும், ரிஷிகளும், சித்தர்களும் இந்த மூன்று சூக்கும மறை பொருட்களைப் பற்றி பலவிதமாக விளக்கி வந்தனர்.

அதற்கான காரணம் என்னவென்றால், வான்காந்தம் அதன் தன்மை, அதன் மூலம் இவை பற்றியெல்லாம் அவர்களுக்கு தெளிவான அறிவு இருந்தாலும் கூட அவர்தம் மாணாக்கர்களும், மக்களும் காந்தசக்தி குறித்து அறிந்திருக்கவில்லையாதலால் அவர்கள் அவ்வாறு கதைகள், புராணங்கள், உருவங்கள் மூலம் விளக்க வேண்டிய நிர்பந்தம் இருந்தது.

எனவே அவர்கள் உண்மை, சக்தி, பிரபஞ்சம் என்றும், சிவம், சக்தி, உயிரினங்கள் என்றும், இருப்பு, இயக்கம், அறிவு என்றும், பிதா, புனித ஆத்மா, மகன் என்றும், தூலம், சூக்குமம், காரணம் என்றும், செயல், விளைவு, பயன் என்றும் அவரவர் அனுபவ ஞானத்திற்கு ஏற்றவாறு விளக்கி வைத்தார்கள்.

இவையனைத்திலும் உள்ள அடிப்படை ஆதார சக்தியான சுத்தவெளி ஒன்றுதான் என்பது தெளிவு.

ஆனால், இன்றைய சூழலில் ஒரு கல்வி அறிவே இல்லாத மனிதன் கூட முயற்சி செய்தால் உள்ளுணர்வால் விளங்கிக் கொள்ள வேண்டிய சுத்தவெளி, உயிராற்றல், காந்தம் இவைகளைப் பற்றித் தெளிவாக விளங்கிக் கொள்ள முடியும்.

அந்த அளவுக்கு மெய்ஞானமானது நவீன விஞ்ஞானமாகப் பரிணமித்திருக்கிறது என்பதை மறுக்க முடியாது.

பொதுவாக இந்த வான்காந்தம், ஜீவகாந்தம் என்பது சுத்தவெளியும், சுத்தவெளியின் துகள்களின் சுழற்சியினால் எழுந்த விரிவலைகளும் இணைந்த கூட்டு இயக்கமே.

இந்த மூன்றும் உலகில் உள்ள எல்லா பொருட்களிலும், எல்லா உயிரினங்களிலும் தெளிவாக விளங்கிக் கொள்ளக் கூடியவைகளாகவே இருக்கின்றன.

எனவே பரம்பொருள் என்று அழைக்கப்படுகின்ற எல்லையற்ற பிரபஞ்ச ஒருங்கிணைப்பு ஆற்றலையும், அதனுடைய நுண்பகுதியாகிய விண்ணிலிருந்து வெளியாகும்

விரிவலைகளையும், பிரபஞ்சம் முழுவதும் இவற்றின் கூட்டு ஆற்றல் எல்லா இடத்திலும், எல்லா பொருட்களையும் ஊடுருவி இருக்கின்ற தன்மையினையும் நாம் புரிந்து கொள்ளும் பொழுது, அத்தகைய வல்லமையின் முன் நாம் எவ்வளவு அற்பமான, சாதாரணமான விஷயம் என்பது விளங்கி விடுகின்றது.

இந்த விளக்கம் ஒருவர் மனதில் ஏற்பட்டு விட்டால் அவரிடத்தில் நான் என்கிற அகங்காரமோ, பிறருக்கு தீங்கு விளைவிக்கிற மனப்பாங்கோ நிச்சயமாக எழாது அல்லவா?

அந்நிலையில் இந்த உலகில் உள்ள பௌதிகத் தோற்றங்களோ, பலதரப்பட்ட வடிவங்களோ எவையும் நிலையானவை அல்ல, ஒவ்வொரு பொருளும், தோற்றமும், ஒவ்வொரு நொடியும் கூடுதலும், விலகுதலும் அதாவது இணைதலும், பிரிதலுமாகிய விண் கூட்டத்தின் இயக்க நிலையேயென்பது விளங்கி விடுகின்றது.

இத்தகைய அறிவு விளக்கம் பெற்ற ஒருவர் எப்பொழுதும் விழிப்பு நிலையில் இருக்கவும், தேவைப்பட்டால் ஒழிய மற்ற நேரங்களில் தேவையற்ற பற்றுகளில் இருந்து விடுபட்டு பற்றற்ற நிலையில் வாழ்வதற்கான வல்லமையைப் பெற்று விடுகிறார்.

இப்படிப்பட்ட நிலையை ஒருவர் அடைவதற்கு உடலுக்கும் உயிருக்கும் இடையே உள்ள மனம் என்ற நிலை வளப்பட வேண்டும்.

அதற்கு இந்த மனதிற்கு பயிற்சியளிக்க வேண்டியது அவசியமாகிறது. இந்த மனம் ஏன் இடையறாது ஓடிக் கொண்டேயிருக்கிறது என்று பார்த்தால், நாம் நிறைய காரியங்களைச் செய்கிறோம், செய்ய நினைக்கிறோம்,

இவை அனைத்திற்கும் எண்ணமே அடிப்படையாக இருக்கிறது என்பது விளங்குகிறது. அப்படிப்பட்ட எண்ணங்களே மனம் என்று வழங்கப்படுகின்றன.

இந்த எண்ணங்களுக்குக் காரணமாக இருப்பது நம் வினைப் பதிவுகளே என்பதை நாம் அறிவோம்.

அத்தகைய வினைப் பதிவுகளை அழிப்பதே எண்ணங்களை அற்றுப் போகச் செய்வதற்கான வழியாக இருக்கிறது.

